வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2003 /ஆ4/ 2023. நாள்.11 .08.2023

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி –நான் முதல்வன் திட்டம் –10ஆம் வகுப்பு துணைத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் –பள்ளிகளில் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்று –11 ஆம் வகுப்பு சேர்க்கையினை உறுதி செய்தல் –சார்பு

பார்வை : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி –மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2439/ஆ2/நா.மு /ஒபக/2023 நாள் 04.08.2023

==============

பார்வையில் காணும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் ஏப்ரல் –2023 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் நடைபெற்று முடிந்த ஜூன் /ஜூலை –2023 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மானவர்களின் 11 ஆம் வகுப்பு சேர்க்கையினை உறுதிச்செய்திட அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வை கடிதம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்:
1. அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.
2. மாவட்ட திட்ட அலுவலர்,ஒருங்கிணைந்த பள்ளி கல்வி,காந்தி நகர்,வேலூர்–6. தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் :
மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள் அவர்களுக்கு (
.தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை - 600 006
மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
திருமதி மா. ஆர்த்தி, இ.ஆ.ப.
ந.க.எண் : 2439/ஆ2/நா.மு/ஒபக/2023 நாள்: 04.08.2023

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - நான் முதல்வன் திட்டம் - 10 ஆம் வகுப்பு துணைத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் - பள்ளிகளில் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்று - 11 ஆம் வகுப்பு சேர்க்கையினை உறுதி செய்தல் - சார்ந்து.

....

அரசு பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் கடந்த ஜூன் - ஜூலை 2023-ல் துணைத் தேர்வு எழுதியுள்ளார்கள். தேர்வெழுதிய மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் கடந்த 24.07.2023 அன்று வெளியாகி உள்ள நிலையில் துணைத் தேர்வு எழுதிய மாணவர்களில் 21951 பேர் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களின் 11 ஆம் வகுப்பு சேர்க்கையினை உறுதிச்செய்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>தலைமையாசிரியர்களுக்கான பொறுப்புகள்</u>

- துணைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தவறாமல் பள்ளிகளுக்கு வந்து மதிப்பெண் சான்றிதழ் பெற சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
- தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும், அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 11 ஆம் வகுப்பு விருப்பப் பாட பிரிவு மற்றும் பள்ளிகளில் சேர்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருதல் வேண்டும்.

11 ஆம் வகுப்பு சேர்க்கை பெற்ற மாணவர்களின் விவரங்களை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்திட சார்ந்த தலைமையாசிரியர்களை அறிவுறுத்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறர்கள்.

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

அனைத்து அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)